# 1 இஸ்ரயேல் இறைவாக்கினர்

ஒரு கண்ணாடியைச் சூரிய ஒளி படும் வண்ணம் பிடிக்கும்போது தேவையான இடத்துக்கு அவ்வொளியைத் தெறிக்கச் செய்கின்ற ஆற்றல் அதற்கு உள்ளது. இதன்படி, கண்ணாடியிலிருந்து தெறிக்கப்படுவது கண்ணாடியில் பரவியுள்ள ஒளிக்கதிர்களேயாகும். ஒரு கண்ணாடி செய்கின்ற வேலையைப்போல செய்ய தனி ஆட் குழுவினர் பழைய ஏற்பாட்டில் இருந்தனர். ''இஸ்ரயேல் இறைவாக்கினர்'' என்பவர்களே இவர்களாவர். இறைவனின் செய்தி இவர்களை நோக்கி வந்தபோது இஸ்ரயேல் மக்களுக்கு இவர்கள் அதனை வெளிப்படுத்தினர். கீழே உள்ள படத்தில் இதன் பிரதிபலிப்பைக் காணலாம்.



படம் 1.1 - இறைவாக்கினரின் அழைப்பு

இறைவாக்கினரை எபிரேய மொழியில் ''நபி'' எனவும் கிரேக்க மொழியில் ''பிறொவ்படெஸ்ட்'' எனவும் அழைப்பர். ''இறைவனுக்காகப் பேசுபவர்கள்'' என்பதே இதன் அர்த்தமாகும்.




பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் இரு முக்கிய பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

1. **இறைவாக்குரைப்போர் (எழுத்து வடிவம் பெறாதோர்)** : பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் இருக்கவில்லை. இவர்கள் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். நாத்தான், எலியா, எலிசா போன்றோர்.

2. **எழுத்து வடிவம் பெற்றோர்** : பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் உள்ளன. இந்த இறைவாக்கினரை இரு பிரிவினராகப் பிரிக்கலாம்.

   i. பெரிய இறைவாக்கினர்

   ii. சிறிய இறைவாக்கினர்

i. **பெரிய இறைவாக்கினர் :**

- ★ எசாயா
- ★ எரேமியா
- ★ எசேக்கியேல்

ii. ***சிறிய இறைவாக்கினர் :***

- ★ ஓசேயா
- ★ யோவேல்
- ★ ஆமோஸ்
- ★ ஒபதியா
- ★ யோனா
- ★ மீக்கா
- ★ நாகூம்
- ★ அபக்கூக்கு
- ★ செப்பனியா
- ★ ஆகாய்
- ★ செக்கரியா
- ★ மலாக்கி

இறைவனுக்காகப் பேசுகின்ற இறைவாக்கினர்கள் முதலில் இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டும். இறைமக்களுக்குச் சொல்ல வேண்டியதைச்சரியாக விளங்கிக் கொள்ள வேண்டுமெனில் எப்பொழுதும் இறைவனின் குரலுக்குச் செவிமடுக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

தற்கால சமூகத்திலே இறைவனின் குரலை எம் மத்தியில் கொண்டு வரு கின்ற முக்கிய ஊடகமாகத் திகழ்வது இறைவார்த்தை ஆகும். இதனைப் போன்று இறைவனின் குரலை நாம் இனங்காண்பதற்குப் பல்வேறு நபர்கள் எமக்கு உதவுகின்றனர். குருக்கள், துறவிகள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர் முக்கியமானவர்களாவர். அத்தோடு காலத்தின் அடையாளங்கள் இறைவனின் குரலைத் தேடுவதற்கு எமக்கு உதவுகின்றன.

இறைவாக்கினர் இறைவனுக்காகப் பேசுகின்றவர் என்பதால், தாம் விரும்பியதையன்றி இறைவனுக்குத் தேவையானதையே மக்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்புள்ளவராவர். ஆகவே இறைவனின் திட் டத்தை மக்களுக்குக் கொண்டு செல்லுவதற்கு இறைவாக்கினர் அழைக்கப்பட்டுள்ளனர். (எரே 1 : 4 - 10)

நாமும் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபைக்குள் இறைவாக்கினர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளோம். இந்த அழைப்பிற்குச் சான்று பகர்வது மிகவும் கடினமான செயலாகும். எனினும் நாம் இறைவல்ல மையால் ஊட்டம் பெற்றுச் செயலாற்ற வேண்டும். இதற்கமைய கீழே தரப்பட்டுள்ள கடமைகள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ⋆ உண்மையுள்ளவர்களாகச் செயலாற்றுதல்.
- ⋆ தவறான வழியில் இட்டுச் செல்லப்படுகின்றவர்களைச் சரியான வழியில் கொண்டு வரல்.
- ⋆ உண்மையை மறைக்கின்றவர்களுக்குச் சவாலிடுதல்.
- ⋆ சரியானதைச் செய்வதற்குப் பிறருக்கு வழிகாட்டுதல்.
- ⋆ திருவிவிலியத்தில் உள்ள செய்தியினைப் பிறருக்கு அறிவித்தல்.

காலத்துக்குரிய இறைவாக்கினர்களாக இறைவனின் திட்டத்தை இன்றைய சமூகத்திலே உண்மையாக்குவதற்கு அர்ப்பணத்தோடு உழைப்போம். வழிகாட்டுதல், நல்வழிப்படுத்துதல், சவால் விடுதல், வாழ்க்கையில் சான்று பகர்தல் ஆகியவற்றின் வழியாக உண்மையான இறைவாக்கினர்களாவோம்.

## செயற்பாடு

1. ‘‘இறைவாக்கினர்’’ என்பவர் யார்?
2. இறைவாக்கினர்களின் வகைகளை எழுதுக.
3. ஓர் இறைவாக்கினராக நீர் செய்யக்கூடிய மூன்று செயல்களை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

E [PÐ øh¯ ö\õÀ»õ¾® ö\¯»õ¾®
• ß©õv› øP¯õ¾® Põ»zvØS›
CøÓÁõUQÚµõPz vPÊ [PÒ.